# பத்திரிக்கை செய்தி

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பட்டதாரி ஆசிரியர் மற்றும் சிறப்பு பட்டதாரி ஆசிரியர் (IEDSS) பணித்தெரிவிற்கு நாடுநர்களின் தகுதிகள் குறித்து சரிபார்க்க வாய்ப்பு வழங்கப்பட்டு, திருத்தம் மேற்கொள்ளவேண்டி இருப்பின் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் Online மூலம் 10.03.2017 முதல் 23.03.2017 வரை திருத்தங்கள் மேற்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஏற்கனவே பணித்தெரிவு செய்யப்பட்டவர்கள் பணியில் சேராமல் இருப்பின் அவர்கள் சார்பான விண்ணப்பங்கள் நேரில் (அ) தபால்மூலம் 01.05.2017 முதல் 10.05.2017 வரை வழங்க கால அவகாசம் அளிக்கப்பட்டு, பெறப்பட்ட கோரிக்கைகள் பரிசீலித்து திருத்திய Merit List தயார் செய்யப்பட்டு பாடவாரியாக காலிப்பணியிட எண்ணிக்கையின் அடிப்படையில் 1:1 என்ற விகிதத்தில் சான்றிதழ் சரிபார்க்க அழைக்கப்படவுள்ள நாடுநர்கள் பட்டியல் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிநாடுநர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு அழைப்புக் கடிதம் தனியாக அஞ்சல் வழியாக அனுப்பிவைக்கப்படமாட்டாது. இணையதளத்தில் வெளியிடப்படும் அழைப்புக் கடிதத்தினையே எடுத்துவருதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| சான்றிதழ் சரிபார்ப்பு நாள் மற்றும் நேரம் | : | 08.06.2017 முதல் 10.06.2017 முடிய<br>காலை 10.00 மணி |
| இடம் | : | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அசோக் நகர், சென்னை.83 (அசோக் பில்லர் அருகில்) |

தலைவர்